பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 14 ஞாயிற்றுக்கிழமை 29.12.2024 | அதிர்வு 150

**ஈழத்தின் மூத்த படைப்பாளர்**

## யோகேந்திரநாதன் இன்று காலமானார்



அறுபது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழ் இலக்கிய உலகில் பிரகாசித்த மூத்த படைப்பாளர் நா.யோகேந்திர நாதன் காலமானார்.

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# முன்னைய அரசுபோல் செயற்படமாட்டோம்

## சட்டவிரோத மதத் தலங்களுக்கு அனுமதியில்லை என்று புத்தசாசன அமைச்சர் திட்டவட்ட அறிவிப்பு

“கடந்த ஆட்சிகள் போல் இந்த ஆட்சியில் சட்டவிரோத மதத் தலங்களுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது.”-என்றுபுத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனெவி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“கடந்த அரசுகள் போல் இந்த அரசையும் எவரும் நினைத்துவிடக்கூடாது. இது குறுக்குவழியில் வந்த அரசு அல்ல. ஆட்சி மாற்றத்தை விரும்பிய மக்கள் அலையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே இது.

கடந்த ஆட்சிகள் போல் இந்த ஆட்சியில் சட்டவிரோத மதத் தலங்களுக்கு ஒரு போதும் அனுமதி வழங்கப் படமாட்டாது. கடந்த ஆட்சிகளில் சட்டவிரோத மதத் தலங்களே மத வன்முறைக்கு வழி வகுத்தது. அது இறுதியில் இன வன்முறையாக வெடித்தது. அப்படியான அராஜக நடவடிக்கைகளை இந்த ஆட்சியில் எதிர்பார்க்க முடியாது.

குழப்பவாதிகள் எவரும் இருந்தால் அவர்கள் பாரபட்சமின்றி தண்டிக்கப்படுவார்கள். சட்டம் தனது கடமையைச் சரிவரச் செய்யும்.” - என்றார்.

## புலிகள் காடு மாறினாலும் அதன் உடலில் உள்ள புள்ளிகள் மாறாது!

### இப்படி எச்சரிக்கின்றார் சுமண ரத்ன தேரர்

“வடக்கு, கிழக்கில் உள்ள சில இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி சூழ்ச்சி நடக்கலாம். எனவே, பாதுகாப்புத் தரப்புகள் விழிப்பாகவே இருக்க வேண்டும்.” – என்று

04




## இரு இளைஞர்கள் நீரில் மூழ்கிச் சாவு

### மாத்தளையில் சோகம்

மாத்தளை நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பணிபுரிந்த இரண்டு இளைஞர்கள் சுது கங்கையில் வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மாத்தளை, கிவுல பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரும், களுதாவளை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபருமே உயிரிழந்துள்ளனர்.

நீர் சுத்திகரிப்பு நிலையத்தில்04





# ஈழத்தின் இலக்கியப் பேராளுமைக்கு அஞ்சலிகள்!

## யோகேந்திரநாதனின் மறைவையொட்டி சிறீதரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிப்பு

ஈழ மண்ணின் மூத்த படைப்பு இலக்கியவாதியும், கிளிநொச்சி மண்ணுக்கு அடையாளம் தந்தவருமாகிய மதிப்பார்ந்த நா.யோகேந்திரநாதன் ஐயா மறைந்தார் என்ற செய்தி மனதை நொருங்கச் செய்திருக்கின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யோகேந்திரநாதனின் மறைவையொட்டி அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“அகவை மூப்பையும் அதனால் அவர் உற்றிருந்த நோய் உபாதைகளையும் கடந்தும் தமிழ்த் தேசியப் பயணப் பாதைகளை தன் படைப்புகள் ஊடாக வெளிக்கொணர வேண்டும் என்ற பேரவாவில் எழுத்துலகில் இயங்கிக் கொண்டே இருந்த ஈழத்தின் புகழ்பூத்த பேராளுமையான அவர், ஈழவிடுதலைப் போர் குறித்த அனுபவங்களையும், ஆதாரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த ஈழத்தின் அடையாள மனிதனாகவுமே இறுதி வரை இருந்தார்.

போராட்ட காலத்தில் புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான நா.யோகேந்திரநாதனின் “உயிர்த் தெழுகை“ நாடகம் ஈழ உணர்வாளர்கள் மத்தியில் அவருக்கான இடத்தை மேலுயர்த்தி, எமது மக்களின் உணர்வுகளில் நிறைந்த மனிதனாக அவரை மாற்றியிருந்தது.

இன விடுதலை என்ற சத்திய இலட்சியத்தை தன் இதயத்தே சுமந்த ஓர் பேனா முனைப் போராளியாக விடுதலைப் போராட்ட காலத்தில் எத்தனை வீரியத்தோடு அரசியல், நாடக, வானொலித் துறை சார்ந்து இயங்கினாரோ, அதே வீரியத்தையும், விவேகத்தையும் படைப்பு இலக்கியம் எனும் துறைக்குள் ஒருசேர இணைத்து, புனைவுகள் அற்ற போரியல் ஆவணங்களாக தன் படைப்புகளை வெளிக்கொணர்ந்த வண்ணமிருந்த அவரின் எழுத்துலகப் பணி, ஒரு விடுதலைப் போராளியின் ஆத்ம தாகம் நிறைந்த காலப் பெரும் பணியாகவே இருந்தது.

நீந்திக் கடந்த நெருப்பாறு நாவல் தொடர்களின் வெளியீட்டின் பின்னர் நோயுற்றிருந்த அவர் அதிலிருந்து ஓரளவு மீண்டெழுந்த பின்னர், உலகப் போரியலின் வரலாற்றுத் திருப்பு முனையான “குடாரப்புத் தரையிறக்கம்“ குறித்துப் பேசும் 34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்னும் வரலாற்று நாவலை எழுதி வெளியிட்ட நிறைவில் இருந்து நாம் இன்னும் மீளாத நிலையில் அவர் மறைந்தார் என்ற செய்தி மனத்துயரைத் தந்திருக்கின்றது.

ஒரு படைப்பாளன் தன் படைப்புகளின் வழி காலம் உள்ளவரை வாழ்வான் என்பது எத்துணை உண்மையோ, காலம் எம் மண்ணில் உற்பவித்த விடுதலைப் போராளி ஐயா யோகேந்திர நாதனும் தமிழ்த் தேசியத்தின் அழியா முகமாக என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்தே இருப்பார்.

இலட்சியப் பற்றுறுதி மிக்க, எமது மண்ணின் முதுபெரும் ஆளுமை “மாமனிதர்“ யோகேந்திரநாதனுக்கு எமது புகழ் வணக்கம். அவரின் ஆத்மா அமைதி பெறவும், இழப்பின் வலி சுமந்திருக்கும் அவரது குடும்பத்தினர் இந்தத் துயரிலிருந்து மீளவும் எனது பிரார்த்தனைகளும்.” - என்றுள்ளது.

# சிறந்த உள்ளூராட்சி சபைக்கான விருது பெற்ற பூநகரி பிரதேச சபை

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சுற்றுலாத்துறையில் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கிய உள்ளூராட்சி சபைக்கான விருது பூநகரி பிரதேச சபைக்கு வழங்கிவைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பிரதம செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் இந்த விருது வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் விருதை வழங்கி வைக்க அதனை பூநகரி பிரதேச சபை செயலாளர் இரட்ணம் தயாபரன் பெற்றுக்கொண்டார்.



# தீவக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க விரைவில் ஒருங்கிணைந்த நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் உறுதி





”தீவக மக்களுக்குப் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை விரைவில் நாம் முன்னெடுக்க இருக்கின்றோம். இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவனுடனும் கலந்துரையாடியிருக்கின்றேன்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பிரிட்டன் வாழ் புங்குடுதீவைச் சேர்ந்த நலன்விரும்பிகளால், வட இலங்கை சர்வோதய குடிதண்ணீர் வழங்கல் திட்டத்துக்கு வெள்ளிரும்பிலான குடிதண்ணீர் பவுசர் கையளிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை புங்குடுதீவு புஸ்பாமணி மண்டபத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநரால், பவுசர் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டு உதவிய நலன்விரும்பிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர்,

“குடிதண்ணீரின் தேவை இன்று தீவகப் பகுதியில் மாத்திரம் அல்ல யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலும் உணரப்பட்டுள்ளது. இன்று அங்கு குடிதண்ணீரின் தரம் மற்றும் அளவு தொடர்பில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. கடல் நீரை நன்னீராக்கி குடிதண்ணீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் வேறு குடிதண்ணீர் மூலங்களையும் கண்டறிய வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

தொண்டர் கந்தையா திருநாவுக்கரசின் எண்ணம், சிந்தனை நல்நோக்குடன் இருந்தமையால் அவர் அன்று ஆரம்பித்த வட இலங்கை சர்வோதய சங்கம் வியாபித்து விருட்சமாக வளர்ந்திருக்கின்றது. நாம் நல்ல எண்ணத்துடன் எதை ஆரம்பித்தாலும் அதை இறை சக்தியாவது வெற்றிகரமாக நடத்தி முடிக்கும்.

இந்த ஊர் மக்கள் புலம்பெயர்ந்து சென்றாலும் தமது சொந்த மண்ணை மறக்கவில்லை. அதனால்தான் அவர்கள் இன்றும் உங்களுக்கு உதவியைச் செய்கின்றார்கள். இவ்வாறு உதவி செய்ய முன்வந்த அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இவ்வாறான உதவிகளை உரிய முறையில் நீங்கள் பயன்படுத்திப் பலன் பெற வேண்டும்.” – என்றார்.

இதேவேளை, புங்குடுதீவு பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் தேவை எனவும், ஏதாவது ஒரு வங்கி அமைக்கப்பட வேண்டும் எனவும் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

[04ஆம் பக்கம் பார்க்க]









# இலங்கை வங்கியின் முன்னாள் முகாமையாளர் ஒருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை வங்கியின் முன்னாள் முகாமையாளர் ஒருவர், பெருந்தொகைப் பண மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கியில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து 15 இலட்சம் ரூபாவை ஒருவரிடம் இருந்து மோசடி செய்தார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர்ந்தே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் பெற்றுக்கொண்ட பணத்துக்காகச் சந்தேகநபர் காசோலை வழங்கிய போதிலும், குறித்த காசோலை திரும்பியதைத் தொடர்ந்தே அவர் மீதான முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தலைமறைவாக இருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

**தீவக மக்களின்....** [03ஆம் பக்கத் தொடர்ச்சி]

வட இலங்கை சர்வோதய சங்கத்தின் அறங்காவலர் செல்வி பொன் யமுனா தேவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேள், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், தீவகம் தெற்கு பிரதேச செயலர் க.சிவகரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன், வேலணை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அ.ஜெயக்குமாரன் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.







## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**புலிகள் காடு...**

அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில்தான் நந்திக் கடலில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் சர்வதேச ரீதியில் அவர் எதிர்கொண்ட அழுத்தங்கள் ஏராளம். போர் இவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாலும் எமது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம்கூட இதன் ஓர் அங்கம்தான்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டதால் மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்று எவராலும் கூற முடியாது. எனவே, மஹிந்தவைப் பாதுகாக்க வேண்டியது எமது இனத்தின் கடப்பாடாகும்.

76 ஆண்டு கால சாபத்துக்கு முடிவு கட்டத்தான் அநுரவை ஜனாதிபதியாக்கினார்கள். எனவே, அவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி மாளிகை பகுதிகளில் உள்ள வீதிகளில் இருந்த பாதுகாப்பு நீக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இருந்த இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைச் சிலர் தவறாகப் பயன்படுத்தி சூழ்ச்சி செய்கின்றனரா என்பது பற்றி பாதுகாப்புத் தரப்பினர் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில் புலிகள் காடு மாறினாலும் அதன் உடலில் உள்ள புள்ளிகள் மாறாது என்பார்கள்.

ஜனாதிபதி செயலக வீதிகளைத் திறக்க முடியும் என்றால், திவுலபத்தான வீதியை ஏன் திறக்க முடியாது?” - என்று அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கேள்வி எழுப்பினார்.

**யோகேந்திரநாதன்...**

யாழ்ப்பாணம், வடமராட்சி, கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட யோகேந்திரநாதன் (வயது 80) இன்று நீர்வேலியில் காலமானார்.

1960 களில் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களில் நேரடியாகப் பங்கெடுத்த அவர் தன் வாழ்நாளின் கடைசி வரை எழுத்துலகில் பிரகாசித்தார்.

**இரு இளைஞர்கள்...**

பணிபுரிந்துகொண்டிருந்த ஒருவர் நேற்று சனிக்கிழமை நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் வலையில் இருந்து பீப்பாய் ஒன்றை அகற்ற முற்பட்டபோதே கங்கையில் வீழ்ந்துள்ளார்.

கங்கையில் வீழ்ந்த இளைஞரைக் காப்பாற்ற மற்றைய இளைஞரும் கங்கையில் குதித்தார் எனவும், அவ்வேளை இருவரும் நீரில் மூழ்கினர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.



# வயல் வெளியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம்!

## பொலிஸாரினால் கண்டுபிடிப்பு

**(பாறுக் ஷிஹான், சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டு பிடிக்கபட்டது. அத்துடன் கைதான சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை தம்பி நாயகபுரம் பகுதியில் உள்ள வயல்வெளியில் இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் இயங்கி வந்துள்ளது.

சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப் படையில் சோதனை மேற்கொள்ளப் பட்டது.

இதன் போது நீண்டகாலமாக சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலையத்தை நடத்திவந்த 31 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு தொகுதி கசிப்பு, கோடா, காஸ் சிலிண்டர் 1, காஸ் அடுப்பு 1, 20 லீற்றர் கொள்கலன் 2, டங்கர் 1, இரும்பு பரள் 1 ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கைது நடவடிக்கை சம்மாந் துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமை யிலான பொலிஸார் மேற்கொண்டனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தல் நினைவுப் பேருரை

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது நினைவேந்தல் நினைவுப் பேருரை எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 'மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய அரசியல்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பாதுகாப்புத்துறை மாற்றங்கள்

நாட்டின் படைத்துறைக் கட்டமைப்பு மற்றும் படைத் துறையில் உயர் அதிகாரிகள் நியமன முறைமைகள் போன்றவற்றில் மிக முக்கிய மாற்றம் ஒன்றை தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசாங்கம் கொண்டு வருகின்றது.

படை அதிகாரிகளுக்கு உயர் பதவி நியமனங்கள் வழங்குவதற்காக அவர்களுக்குப் பதவி நீடிப்பு வழங்குவதில்லை என்ற ஒரு சீரான முறைமையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால் இன்னும் இரண்டு நாள்களில் முடிவடையும் இந்த ஆண்டுடன் இலங்கை இராணுவம், கடற்படை, மற்றும் விமானப் படையின் தற்போதைய தளபதிகளுக்கு சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் இரண்டாவது பதவி நீடிப்புக்களில் உள்ளனர். அதேசமயம் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தனது முதல் சேவை நீடிப்பில் உள்ளார்.

ஓய்வுபெறவுள்ள மூன்று படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உட்பட பல மூத்த அதிகாரிகளின் பதவிக் காலம் புதிய அரசின் தீர்மானத்தால் இனி நீடிக்கப்படப் போவதில்லை எனத் தெரிகின்றது.

இந்த வருட இறுதியில் ஓய்வுபெறவுள்ளனர் என எதிர்பார்க்கப்படும் ஏனைய அதிகாரிகளில் தேசியப் புலனாய்வுப் பிரிவின் பிரதானி மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்கவும் ஒருவர். ஈஸ்டர் ஞாயிறு படுகொலையை அடுத்து, 2019 ஜூன் இரண்டாவது வாரத்தில் குலதுங்க நியமனத்தைப் பெற்றிருந்தார்.

இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி போன்ற பதவி நிலையில் உள்ளோர் ஏறத்தாழ ஒரே சமயத்தில் - அடுத்தடுத்து - ஓய்வு பெறும் நிகழ்வு இதற்கு முன்பு இருந்ததில்லை என்றும் கூறப்படுகின்றது.

நாளை மறுதினம் 31ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் சேவை நீடிப்பு கிடைக்காது. அவரோடு படைத் துறையில் உயர் அதிகாரிகளின் - தளபதிகள் மட்டத்தின் - ஓய்வு நடவடிக்கைகள் ஒரே சமயத்தில் தொடர்ந்து நிகழும் என் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய அரசின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர படை அதிகாரிகளின் சேவை நீடிப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேரடியாக விளக்கினார் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னரைப் போலல்லாமல், புதிதாக ஓய்வு பெறும் அதிகாரிகள் இனிமேல் இராஜதந்திர நியமனங்களுக்கு பரி சீலிக்கப்பட வாய்ப்பில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாடுகளில் இராஜதந்திரப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த முன்னாள் படைத் தளபதிகள், ஏலவே ஆட்சி மாற்றத்தின் போது மீள அழைக்கப்பட்டிருந்தனர்.

மூன்று முன்னாள் கடற்படைத் தளபதிகளான அட்மிரல்களான ஜயநாத் கொலம்பகே (இந்தோனேசியா), ரவி விஜேகுணரத்ன (பாகிஸ்தான்) மற்றும் நிலந்த உலுகெதென்ன (கியூபா) ஆகியோர் இப்படி மீள அழைக்கப்பட்டவர்களில் அடங்குவர். நேபாளத்திலிருந்து எயார் சீவ் மார்ஷல் சுதர்சன பத்திரனையும் புதிய அரசு திரும்ப அழைத்திருந்தது.

புதிய அரசின் கொள்கைக்கு இணங்க, பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமை அலுவலகம் மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவி நிலை ஆகியன அகற்றப்படுகின்றன. ஆயுதப் படைகளின் ஒருங்கிணைப்பு இனி அந்த அலுவலகத்திடம் இருக்காது. பாதுகாப்பு அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் அது கொண்டு வரப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே தற்போதைய பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா நாளை மறுதினம் ஓய்வு பெறுகின்றமையுடன் அந்தப் பதவி நிலையே இல்லாமல் போகும்.

பாதுகாப்புத் துறையில் அரசுத் தலைவர்களுக்குப் பிடித்தமானவர்கள் முறையற்ற விதத்தில் பதவி நிலைகளை கைப்பற்றித் தக்க வைத்திருக்கும் முறைமையை மாற்றுவது வரவேற்கத்தக்க விடயம்தான்.



# கல்முனையில் மாபெரும் இரத்ததான முகாம்!

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக ரஹ்மத் சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அமைப்பின் செயலாளர் முஹம்மட் முனா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி மற்றும் வைததியர்கள் கலந்து கொண்டனர்.



இரத்ததான முகாமில் சுமார் 70 இற்கும் மேற்பட்ட குருதிக் கொடையாளர்கள் கலந்துகொண்டு தங்களது இரத்தங்களைத் தானம் செய்தனர்.








# உயர் டிப்ளோமா பாடநெறி மாணவர்களுக்குச் சான்றிதழ்கள்

**(பிரபாகரன் டிலக்சன்)**

ரவர் நாடக அரங்கப் பாடசாலை மூலம் தமிழ் மொழி மூலமான இரண்டு வருட முழுநேர நாடகமும் அரங்கக் கலைகளுக்குமான உயர் டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கு உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப் பாணம் இந்திய கலாசார மத்திய நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக்டிரஞ்சன், வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ், தெல்லிப்பழை தேவஸ்தான அறங்காவலர் கலாநிதி ஆறு.திருமுருகன், ரவர் மண்டப பணிப்பாளர் நாயகம் டி.எம்.எஸ். திசாநாயக்க, டவர் மண்டப பிரதிப் பணிப்பாளர் சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாக முடித்த 2022 – 23 கல்வியாண்டின் 44 மாணவர்களுக்கு உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் 4 மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்தில் பட்டக் கல்வியை தொடர்வதற்கான சிறு உதவித் தொகையும் வழங்கிவைக்கப்பட்டது.

இதன்போது நாடளுமன்ற உறுப்பினர்களான ரஜீவன், இளங்குமரன், ரவர் நாடகப் பாடசாலை ஆலோசணைக் குழு உறுப்பினர்கள், நாடக பாடநெறி விரிவுரையாளர்கள், டிப்ளோமாதாரர்கள் பெற்றோர்கள் மற்றும் நாடகப் பாடசாலை மாணவர் குழு உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# விவசாய உற்பத்திகளுக்கு கழிவு முறைமை நீக்கப்படுதல் வேண்டும் என்று கோரிக்கை!

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் ஆளுநரிடம் விடுத்தனர்

**(த.சுபேசன்)**

விவசாய உற்பத்திகளுக்கு யாழ்ப் பாண மாவட்ட சந்தைகளில் உள்ள கழிவு நடைமுறை தடை என்பது சொல்லில் அல்லாமல் செயலில் இருக்க வேண்டும் என்று இயற்கையின் நண்பர்கள் இயக்கம் வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விவசாயிகளின் உழைப்பை சுரண்டும் வகையில் யாழ். மாவட்ட விவசாயிகளிடம் இருந்து சந்தை வியாபாரிகளால் விவசாய உற்பத்திகளுக்கு ஒவ்வொரு 10 கிலோவுக்கும் ஒரு கிலோ கழிவு முறைமையானது திருநெல்வேலி, மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற சந்தைகளில் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றது.

இதனால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே பல தடவைகள் விவசாயிகளால் பல கூட்டங்களிலும் அறிவிக்கப்பட்ட போதிலும் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சந்தைகளில் விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டு அவர்களிடம் இந்த கழிவு அறவிடப்படுகின்றது. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் இது தொடர்பாக தனிப்பட்ட ரீதியில் முறைப்பாட்டினை பதிவு செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

கொள்கை ரீதியாக விவசாயிகளின் பொதுவான முறைப்பாடாக இதனை எடுத்து கழிவு முறைமையை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் சந்தைகளை குத்தகைக்கு கொடுக்கும் போது இந்தக் கழிவு நடைமுறையை நடைமுறைப்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையும் பின்பற்றியே வழங்க வேண்டும்.

இது தொடர்பாக கடந்த பல ஆண்டுகளாக மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள், மாவட்ட விவசாய குழுக் கூட்டங்கள் என்று பல்வேறு கூட்டங்களிலும் விவசாயிகள் கூறி வந்த போதும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இதனை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டத்தில் வாக்குறுதிகள் மட்டுமே வழங்கப்பட்டன. ஆனால் அதனை செயற்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவில்லை.

தற்போது ஆட்சி மாறிய நிலையில் எதிர்காலத்திலாவது எழுத்திலும், சொல்லிலும் உள்ள விவசாய உற்பத்திகளுக்கான 10 வீத கழிவு நடை செயலில் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று விவசாயிகளில் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.– என்றுள்ளது.

# 2025 இல் கிழக்கு இலக்கிய விழா பாரிய மாற்றத்துடன் நடைபெறும்!

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் நவநீதன் தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

2024 ஆம் ஆண்டுவரை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தப்பட்டு வந்த 'அரச உத்தியோ கத்தர்களுக்கான படைப்பாக்கம் மற்றும் கலை இலக்கிய போட்டி' நிகழ்வுகளானது 2025 ஆம் ஆண்டு முதல் திறந்த போட்டியாக மாற்றியமைக்கப்பட்டு நடத் தப்படவுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவண முத்து நவநீதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2025 ஆம் ஆண் டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழா வில் பரிசுகள் வழங்கி கௌரவிக் கப்படவுள்ளனர் என்றும் அதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் கலை இலக்கிய செயற்பாட்டினை ஊக்குவிப்பதற்காகவும் பின்வரும் தமிழ்மொழி மூல போட்டி நிகழ்வுகளில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து தமிழ் மொழி மூல எழுத்தாளர்களும், இலக்கிய செயற் பாட்டாளர்களும், ஏனைய ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

புதுக்கவிதை, மரபுக்கவிதை, சிறுகதை, குறும்பட பிரதியாக்கம், புகைப்படம், பட்டி மன்றம், ஓவியம், கரோகி பாடல், கிராமிய நடனம் கலப்பு நடனம் போன்ற நிகழ்வுகளுக்கான போட்டி நிபந்தனைகளையும் விண் ணப்ப படிவங்களும் கிழக்கு மாகாணத் திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத் தர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





# சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு அஷ்ரப் தாஹிர் எம்.பி. விஜயம்

(எம். எப். றிபாஸ்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் விஜயம் செய்துள்ளார்.

வைத்தியசாலையின் தேவைகள் குறித்தும், சம்மாந்துறை பிரதேசத்தில் அரச ஒசுசல எதிர்காலத்தில் திறப்பது சம்பந்தமாகவும் வைத்தய அத்தியட்சகர் டீ. பிரபாசங்கருடன் விரிவாக கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் எஸ்.எம்.அலி ஜின்னா உட்பட வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு







(கே. எ. ஹமீட்)

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர், பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ். உதுமாலெப்பை, ஜே.பி. கட்சியின் உயர்பீட உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான ஏ.சீ.சமால்டீன் ஆகியோர் கடந்த பொதுத் தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரி விக்கும் நிகழ்வு கட்சியின் உயர்பீட உறுப்பினரும் நற் பிட்டிமுனை பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளருமான தௌபீக் தலைமையில் நற்பிட்டிமுனையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நற்பிட்டிமுனை பிரதேச கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.





# ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு

(எம். எப்.றிபாஸ்)

திருக்கோவில் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோளாவில் விநாயகர் வித்தியாலயத்தில் 1993 - 94 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உயர்தரம் கற்ற நண்பர்கள் ஒன்று கூடலும், ஆசிரியர் கௌரவிப்பும் பாடசாலையில் இடம் பெற்றன.

அபிவிருத்தி உத்தியோகத்தரும், ஏற்பாட்டுக் குழுவின் தலைவியுமான எஸ்.கலைமதி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் "கற்றுத்தந்த ஆசிரியர் பெருந்தகைகளை பாராட்டி கௌரவித்தலும், கற்ற பாடசாலைக்கு மகுடம்சூட்டுதலும்" எனும்தொனிப்பொருளில் பலர் இங்கு கௌரவிக் கப்பட்டனர்.

கோளாவில் விநாயகர் வித்தியாலயத்தில் கடந்த 35 வருடங்களாக ஆசிரியராகவிருந்து சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி சோம சுந்தரம், பத்து வருடங்களாக அதிபராக இருந்த எஸ்.குணாளன் உட்பட பலர் இங்கு பராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இசை, நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.





# நேர்முகப் பரீட்சை நுட்பங்கள் எனும் 40 நுல்கள் அறிமுகம்

(எம்.எப்.றிபாஸ்)

இலங்கை சமாதான கற்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளரும், அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவருமான கலாநிதி எஸ். எல்.ரியாஸ் எழுதிய நூல் அறிமுகம் அட்டாளைச்சைனை லொயிட்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட சாரணர் சங்கத்தின் ஆணையாளர் எம். ஐ. உதுமாலெப்பை தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் கலாநிதி றியாஸால் கடந்த 20 ஆண்டுகளாக எழுதப்பட்ட நேர்முக பரீட்சை நுட்பங்கள் எனும் 40 நூல்களை அறிமுகம் செய்து வைத்து சங்கத்தின் உயர் சபையினருக்கு வழங்கி வைத்தார்.













# பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் நடத்திய 'பிறிட்ச் மார்க்கெற்' தீக்கிரை!

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிப்பு

(எம். எப். றிபாஸ்)

கல்லடி பழைய பாலத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் 'பிறிட்ச் மார்க்கெற்' நேற்று (28) திகதி இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நஞ்சற்ற உணவு வகைகளை விற்பனை செய்யும் ஒரு சந்தையாக காணப்பட்ட இந்தச் சந்தையில் சுமார் 12 வருடங்களாக 30 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வியாபாரம் செய்து வருகின்றனர்.

தமது வாழ்வாதாரத்துக்காக நாளாந்தம் மரக்கறி, அரிசி, அரிசி மா, தேன், நெய், கருவாடு போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை ஈட்டி வந்த நிலையிலேயே இந்த நாசகார செயல் இடம்பெற்றுள்ளது.

நாளாந்தம் காலை 7 மணி முதல் பிறபகல் 2 மணி வரை வியாபார நடவடிக்கையில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் வேளையில் குறித்த பகுதியில் மரக்கறி, பழவகை போன்ற பொருள்களை வெளியிடத்து வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகின்றனர்.

நேற்று நள்ளிரவு இந்த நாசகார செயலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும், மனநலம் பாதிக்கப்பட்டவராக சொல்லப்படும் நபரொருவரை மட்டக்களப்பு தலைமைய பொலிஸார் விசாரணைகளுக்காக அழைத்து சென்றுள்ளனர் என்று மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாகக் குறித்த சந்தைக்கு அருகாமையில் இருந்த பொலிஸ் காவலரணில் இருந்த பொலிஸாரின் கடமை நிறுத்தப்பட்டதன் பின்னர் இந்தப் பகுதியில் குற்றச் செயல்களும், போதைப் பொருள் பாவனையாளர்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் தமக்கான நீதியை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# வன்னி மண் சுமந்த மேனியர்: மகாலிங்கம் பத்மநாபன் மறைவு!

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

மகாலிங்கம் பத்மநாபன் எழுதி, 2022 ஆவணி மாதம் வெளிவந்த அது ஒரு அழகிய நிலாக்காலம் நாவல் வன்னி மண்ணின் உயிர்ப்பான வரலாற்றை விவரிக்கும் படைப்பாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியப் பெருந்தகை மகாலிங்கம் பத்மநாபன், தான் நேசித்த மண்ணில் நேற்று முன்தினம் (27) விழி மூடினார்.

மண்வாசனை வீசும் அது ஒரு அழகிய நிலாக்காலம் புதினத்தை எழுதிய பத்மநாபன் மகாலிங்கம் 1948.11.24 இல் தென்மராட்சி மீசாலையில் பிறந்தவர். தனது ஆரம்பக்கல்வியை பரந்தன் அ.த.க. பாடசாலையிலும், உயர்கல்வியை யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாசாலை மற்றும் இராமகிருஸ்ண மிஷன் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் பயின்றார்.

மீசாலையில் பிறந்த இவர் பெரிய பரந்தன் எனும் ஊரரை வசிப்பிடமாகவும் கொண்டவர். 1972 இல் மன்னார் இலகடிப்பிட்டி றோமன் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக பணி புரிந்தார். 1978 இல் வசாவிளானிலுள்ள பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலையில் பயின்று 1982 இல் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும்



கடமை புரிந்தார்.

இதன் பின்னர் 1982 இல் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், சாரணர் இயக்க பொறுப்பாசிரியராகவும் பணி புரிந்தார். இவர் கிளிநொச்சி தமிழ்சங்கத்தில் ஆயுள்கால உறுப்பினராகவும் உள்ளார். நாட்டுக்கூத்துப் போன்றவற்றை மாணவர்களுக்கு பயிற்றுவித்து மேடையேற்றி வந்தார்.

மகாலிங்கம் பத்மநாபன் எழுதிய "அது ஒரு அழகிய நிலாக்காலம்" வன்னியின் மூன்று கிராமங்களின் கதை தொகுப்பு நூலாக 2022 இல் வெளியாகியது. வணக்கம் லண்டனில் தொடர்கதையாக வெளிவந்த சமயத்தில் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்ற இத் தொடர், நூலாக தொகுக்கப்பட்டு சுப்ரம் பிரசுராலயத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அது ஒரு அழகிய நிலாக்காலம் நூலைப் படிக்கப்போகும் ஒவ்வொருவரும் இக்கிராம மக்களின் வரலாற்றிலும், அவர்களின் வாழ்வியலிலும் எவற்றையெல்லாம் அறிந்து கொள்ள விரும்புவாரோ அவற்றையெல்லாம் இந்நூலாசிரியர் மிகைப்படுத்தாமல் பதிவு செய்துள்ளார் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, மூத்த பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கிராமங்களில் இருந்து பிற்காலத்தில் வெளிக்கிளம்பியவர் களில் சிலர் இன்று தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் கல்வி, பொருளாதாரம், அரசியல், எழுத்தியல், சமூகப்பணி என்ப வற்றால் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்டவர்கள். அவர்கள் தமது மூதாதையினர் எங்கிருந்து? எப்போது? எவ்வாறு? ஏன்? இக்கிராமங்களுக்கு வந்து குடியேறினார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள அவர்களுக்கும், அவர்களின் எதிர்காலச் சந்ததிக்கும் இந் நூல் சிறந்த பெட்டகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை என்று மூத்த பேராசிரியர் புஸ்பரட்ணம் இந்நூலில் தெரிவித்துள்ளார்.

வன்னி மண்ணின் வரலாற்றை சுமந்த மேனியராக வாழ்ந்த பெருந்தகை மகாலிங்கம் பத்மநாபன் ஈழத்து இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனி முத்திரையை பதித்துள்ளார்.



# மன்மோகன் சிங் நினைவிட விவகாரத்தை அரசியலாக்க கூடாது: பா.ஜ.க. கண்டனம்

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் நினைவிட விவகாரத்தை காங்கிரஸ் கட்சி அரசியலாக்க கூடாது என்று பா.ஜ.க. கண்டனம் தெரிவித்துள்ளது.

மன்மோகன் சிங்கின் உடல் தகனம் செய்யப்படும் இடத்தில் அவருக்கு நினைவிடம் அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பினார்.

இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகம் அளித்துள்ள விளக்கத்தில்,

"முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நினைவிடம் அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் கோரியுள்ளார். இதுகுறித்து அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் தலைவர் மற்றும் மன்மோகன் சிங்கின் குடும்பத்தினரை தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது மன்மோகனுக்கு நினைவிடம் அமைக்க மத்திய அரசு சார்பில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்காக புதிதாக அறக்கட்டளை அமைக்கப்படும். இதற்கு காலஅவகாசம் தேவைப்படும் என்று காங்கிரஸ் தலைவர் மற்றும் மன்மோகன் குடும்பத்தினரிடம் அமைச்சர் அமித் ஷா எடுத்து கூறினார்." என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் வட்டாரங்கள் கூறும்போது,

"முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் அவருக்கு நினைவிடம் கட்டப்பட்டு உள்ளது. இதேபோல மன்மோகன் சிங்கின் உடல் தகனம் செய்யப்படும் இடத்தில் அவருக்கு நினைவிடம் அமைக்க கோரிக்கை விடுத்தோம். ஆனால் அரசு சார்பில் இன்னமும் நிலம் ஒதுக்கப்படவில்லை" என்று குற்றம் சாட்டின.

பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் கேசவன் கூறும்போது,

"முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் உடலை காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் வைக்கக்கூட அந்த கட்சி அனுமதி வழங்கவில்லை. முந்தைய காங்கிரஸ் அரசு அவருக்கு நினைவிடம் கூட அமைக்கவில்லை" என்று குற்றம் சாட்டினார்.

இந்த விவகாரம் தொடர்பாக பா.ஜ.க. தலைமை வெளியிட்ட அறிக்கையில்,

முன்னாள் பிரதமர் மன்மோகனின் நினைவிட விவகாரத்தில் காங்கிரஸ் அநாகரிக அரசியலில் ஈடுபடுவதை நிறுத்தி கொள்ள வேண்டும். மன்மோகன் வாழ்ந்த காலத்தில் காங்கிரஸ் கட்சி அவருக்கு உரிய மரியாதை வழங்கவில்லை. அவரது உயிரிழப்புக்கு பிறகும் அதே நிலை நீடிக்கிறது.

முன்னாள் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜியை, காங்கிரஸ் தலைமை எவ்வாறு நடத்தியது என்பது குறித்து அவரது மகள் பகிரங்கமாக அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளார். காங்கிரஸின் வரலாற்று தவறுகளை மக்கள் மறக்கவில்லை."– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்மோகன் சிங்கின் சேவையை அவமதிக்கிறது பா.ஜ.க. அரசு

## முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு

நினைவகம் கட்டும் இடத்தில், இறுதிச்சடங்கை நடத்த கோரியதை பா.ஜ.க. அரசு நிராகரித்தது, மன்மோகன் சிங்கின் உயர்ந்த தொண்டை நேரடியாகவே அவமதிக்கும் செயல் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து, அவர் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில்,

"முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் குடும்பத்தார் அவருக்கு நினைவகம் கட்டுவதற்குரிய இடத்தில் அவரது இறுதிச் சடங்குகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரியதை பாஜக அரசு நிராகரித்துள்ளது. இது அவரது உயர்ந்த தொண்டையும், அவரது சீக்கிய சமூகத்தையும் நேரடியாகவே அவமதிக்கும் செயலாகும்.

அவரது குடும்பத்தார் வைத்த கோரிக்கையை மறுத்து, இரு முறை பிரதமராக இருந்த தலைவரின் இறுதிச் சடங்கு நிகழ்வைச் சாதாரணமாக நிகம்போத் காட்–இல் வைத்து நடத்தியிருப்பது, மத்திய பா.ஜ.க. அரசின் ஆணவத்தையும், பாரபட்சத்தையும் காட்டுகிறது. இது அவரது பெரும் பங்களிப்புகளை மக்களின் நினைவில் இருந்து அகற்ற முனையும் அப்பட்டமான முயற்சியாகும்.

மன்மோகன் சிங்கின் தலைமை இந்தியாவின் பொருளாதாரத்தை மாற்றியமைத்துக் கோடிக்கணக்கான மக்களை



வறுமையின் பிடியில் இருந்து மீட்டெடுத்தது. இத்தகைய உயர்ந்த தலைவரை அவமதிப்பது என்பது இந்தியாவின் முன்னேற்றத்தையே அவமதிப்பதற்குச் சமமாகும். பெருந்தலைவர்களை அவமதிக்கும் கறை வரலாற்றில் இருந்து என்றும் மறையாது."– என்று குறிப்பிட்டுள்ளார்.





# தென் கொரியாவில் விமான விபத்து; 85 பேர் பலி; மீட்பு பணிகள் தீவிரம்

தென் கொரியாவிலுள்ள முவான் சர்வதேச விமான நிலையத்தில் பெங்கொக் விமானம் ஒன்று ஓடுபாதையிலிருந்து விலகி விபத்துக்குள்ளானது.

விமானம் ஓடுபாதையிலிருந்து விலகி, முவான் சர்வதேச விமான நிலையத்தின் சுவரில் மோதியதாகத் தென் கொரியச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் சிக்கி இதுவரை 85 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்குள்ளான போது, குறித்த விமானத்தில் 175 பயணிகளும், 6 பணிக்குழாமினரும் இருந்தனர் என அந்த தகவல்கள் குறிப்பிடுகின்றன.

விபத்தில் சிக்கியர்களை மீட்கும் பணிகள் தொடர்கின்றன.





# அமெரிக்காவின் 'தாட்' ஏவுகணைகளை முதல் முறையாக பயன்படுத்திய இஸ்ரேல்





ஏமனிலிருந்து ஹவுதி தீவிரவாதிகள் ஏவிய ஏவுகணைகளை, அமெரிக்கா வழங்கிய 'தாட்' வான் தடுப்பு ஏவுகணைகள் மூலம் இஸ்ரேல் நடுவானில் இடைமறித்து அழித்தது. இந்த வகை ஏவுகணைகளை இஸ்ரேல் பயன்படுத்துவது இதுவே முதல் முறை.

இஸ்ரேல் மீது ஈரான் கடந்த ஒக்டோபர் 1 ஆம் திகதி பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியது. இவற்றை இஸ்ரேலின் 'அயர்ன் டோம்' வான் தடுப்பு ஏவுகணைகளால் நடுவானில் இடைமறித்து அழிக்க முடியவில்லை. இதனால் இஸ்ரேலை பாதுகாக்க அமெரிக்கா, 'தாட்' என்ற அதிநவீன வான் தடுப்பு ஏவுகணைகளை வழங்கியது. இதை இயக்குவதற்கு அமெரிக்க வீரர்களும் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டனர்.

தாட் ஏவுகணை லோஞ்சர் வாகனத்தில் உள்ள ரேடார் வானில் 870 முதல் 3,000 கி.மீ தூரம் வரை வரும் சிறிய, நடுத்தர ரக மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை கண்டறிந்து அவற்றை இடைமறித்து அழிக்கும் திறன் வாய்ந் தவை. இந்த தாட் ஏவுகணைகள் இஸ்ரேலில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஏமன் நாட்டிலிருந்து ஹவுதி தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது நேற்று முன்தினம் பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தினர்.

இவற்றை நடுவானில் இடைமறித்து அழிக்க தாட் ஏவுகணைகளை இஸ்ரேல் முதல் முறையாக பயன்படுத்தியது. தாட் ஏவுகணைகள் ஹவுதி தீவிரவாதிகளின் ஏவுகணைகளை வெற்றிகரமாக இடைமறித்து அழித்தன.

இந்த ஏவுகணைகளை ஏவிய அமெரிக்க வீரர் கூறுகையில், " இதுபோன்ற தாக்குதலுக்கத்தான் நான் 18 ஆண்டுகளாக காத்திருந்தேன்" என உற்சாகமாக கூறியுள்ளார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 29/12/2024

## நத்தார் காலப்பகுதியில் காணாமல் போன சிறுமி

கனடாவில் நத்தார் பண்டிகை காலப்பகுதியில் சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளார்.

லாவல் பகுதியில் இந்த சிறுமி காணாமல் போய் உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. 02



# கனடிய அமைச்சர்கள் அமெரிக்காவிற்கு விஜயம்

**கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜொலி மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் டாமினோக் லாபிளாங்க் ஆகியோர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.**

**அமெரிக்காவின் புளொரிடா மாகாணத்திற்கு இவர்கள் இருவரும் விஜயம் செய்ய உள்ளனர்.**

**அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் குழுவினரை சந்திப்பதற்காக அவர்கள் இவ்வாறு அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.**

எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்காவுடன் உறவுகளை பலப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த முக்கிய அமைச்சர்கள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

கனடாவின் ஏற்றுமதிகள் மீது வரி விதிக்கப்படும் என அண்மையில் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் கனடியர்கள் கடும் விமர்சனங்களை வெளியிட்டு இருந்தனர். வரிவிதிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப் பில் கலந்துரையாடப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கிரிப்டோ மோசடியாளர்களிடம் ஏமாறும் கனடிய பிரஜைகள்

கனடிய பிரஜைகள் பெருமளவில் கிரிப்டோ மோசடியாளர்களிடம் ஏமாறுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.


மில்லியன் கணக்கான டொலர்களை கனடியர்கள் இவ்வாறு இழக்கின்றன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் ஆரம்பத்தில் கிரிப்டோ நாணயங்களில் முதலீடு செய்த ஒன்றாரியோ பிரஜைகள் சுமார் 23 மில்லியன் டொலர்களை இழந்துள்ளனர்.

கிரிப்டோ முதலீட்டு திட்டங்களில் பலர் இவ்வாறு பணத்தை முதலீடு செய்து இவ்வாறு பணத்தை இழந்துள்ளனர்.

பல்வேறு மோசடியாளர்கள் இவ்வாறு கிரிப்டோ நாணயங்களை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டு 03






# சர்வதேச மாணவர்கள் கனடா ஊடாக அமெரிக்காவிற்கு கடத்தப்படுகின்றனர்

## இந்தியா குற்றச்சாட்டு

சர்வதேச மாணவர்கள், கனடா ஊடாக அமெரிக்காவிற்கு கடத்தப்படுகின்றனர் என இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது. இந்த சம்பவங்கள் தொடர்பில் இந்திய அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

மாணவர் வீசாவைப் பயன்படுத்தி இந்த சட்டவிரோத செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடியா பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்கு செல்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையானது சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி அமெரிக்க கனடிய எல்லைப் பகுதியில் 39 வயதான ஜெகதீஷ் பட்டில் மற்றும் அவரது மனைவி இரண்டு குழந்தைகள் ஆகியோர் சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கை தொடர்பான பல்வேறு தகவல்கள்




வெளியாகி உள்ளன.

கனடாவிற்கு மாணவர் வீசா மூலம் கல்லூரிகளில் அனுமதி பெற்றுக் கொள்ளும் நபர்கள் கனடாவிற்குள் பிரவேசித்து அங்கிருந்து அமெரிக்கா விற்கு செல்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் எல்லைகளைக் கடந்து அமெரிக்காவிற்கு நபர்கள் பிரவேசிக்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இவ்வாறான பல்வேறு சட்டவிரோத முகவர் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன எனவும் இது தொடர்பான விசாரணைகள் தொடந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விவகாரம் குறித்து கனடா மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் இதுவரையில் எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான விசாரணைகள் தொடந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த விவகாரம் குறித்து கனடா மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் இதுவரையில் எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## நத்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலசியா பெர்ன் என்ற 15 வயதான சிறுமியே இவ்வாறு காணாமல் போய் உள்ளார்.

இந்த சிறுமியின் பாதுகாப்பு தொடர்பில் அவர்களது பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த சிறுமி மோசமான நண்பர்களுடன் பழகி வந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிறுமி மொன்றியல் அல்லது நாவல் பகுதியில் இருக்கக்கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சிறு இந்த சிறுமி 5 அடி 9 அங்குலம் உயரத்தை கொண்டவர் எனவும் 150 பவுண்டு எடை உடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிறுமி பிரெஞ்சு மொழியை சரளமாக பேசக் கூடியவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சிறுமி தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.



# கல்கரியில் கொள்ளை சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட விபத்தில் சிறுமியொருவர் பலி

கல்கரியில் கொள்ளை சம்பவம் ஒன்றை அடுத்து ஏற்பட்ட விபத்தில் சிறுமியொருவர்கொல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் மேலும் மூன்று பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் ஒரு சிறுவரும் உள்ளடங்குகின்றார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து வாகனங்கள் மோதி கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளை சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பயணம் செய்த வாகனம் காரணமாக இந்த வாகன விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. விபத்துச் சம்பவத்தில் ஒன்பது வயதான சிறுமியொருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







## கிரிப்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களை அறிமுகம் செய்து மோசடி செய்கின்றனர் எனவும் இந்த விடயம் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றாரியோ மாகாண பொலிஸார் இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

டிஜிட்டல் நாணயங்களின் பிரபல்யம் அடைந்து வரும் நிலையில் கிரிப்டோ நாணய முதலீட்டு நிறுவனங்களும் தங்களது வாடிக்கையாளர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

கிரிப்டோ நாணயங்கள் பல்வேறு நாடுகளில் காணப்படுவதனால் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதில் பெரும் சவால்களை எதிர் நோக்க நேரிடுவதாகவும் எல்லா நாடுகளின் அரசாங்கங்களும் மோசடிகளை கண்டுபிடிப்பதில் உதவுவதில்லை எனவும் கனடிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் கிரிப்டோ நாணய கொடுக்கல் வாங்கல்களில் சுமார் 94 மில்லியன் டாலர்களை இழந்துள்ளனர்.

கடந்த ஆண்டில் கிரிப்டோ நாணயங்களில் முதலீடு செய்து மோசடிகளில் சிக்கி இழக்கப்பட்ட மொத்த தொகை 124 மில்லியன் டொலர் என தெரிவிக்கப்படுகிறது.